## அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.24/2018 நாள். 28–3–2018

# தனி அலுவலர் அவர்களின் மார்ச் 2018 மாதம் சாதாரண கூட்டப்பொருள்

28–3–2018ம் நாள் வியாழன் மாலை 4.00 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் மார்ச் 2018 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | மார்ச் 2018 | 0 | 0 | 8 | 7 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் மார்ச் 2018 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்

**பொருள் எண். 3**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நாளொன்றுக்கு 1.10MLD குடிநீர் பெறப்பட்டு, பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. பெறப்படும் குடிநீரை கொண்டு இந்நகர் பகுதி குடிநீர் தேவையினை பூர்த்தி செய்ய இயலவில்லை. மேலும், கோடை காலங்களில் குடிநீர் பற்றாக்குறையினால் லாரிகள் மூலம் குடிநீர் தனியார் கிணறுகளிலிருந்து வாங்கி விநியோகம் செய்யும் நிலைமை ஏற்படுவதால், மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் ஆய்வு கூட்டத்தில், பம்மல் செங்கழிநீர் மலை பகுதியில் உள்ள கல்குவாரி பள்ளங்களில் உள்ள நீரை சுத்திகரிப்பு செய்து அனகாபுத்தூர்–பம்மல் நகராட்சிகளுக்கு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டு, மேற்படி செங்கழிநீர்மலை கல்குவாரியில் உள்ள தண்ணீரை சுத்திகரிப்பு செய்ய விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்குமாறு கோரப்பட்டது. அதன்படி பம்மல் செங்கழிநீர் மலை

பகுதி கல்குவாரியில் உள்ள தண்ணீரை தினமும் 2.50MLD எடுத்து பம்மல் நகராட்சிக்கு 1.50MLD குடிநீரும், அனகாபுத்தூர் நகராட்சிக்கு 1.00MLD குடிநீரும் சுத்திகரிப்பு செய்து வழங்கிட விரிவான திட்ட அறிக்கை ரூ.6.40 கோடிக்கு தயாரிக்கப்பட்டமைக்கு அரசு நிதி பெற கருத்துரு அனுப்பி வைக்கவும், மேற்படி பணியினை பம்மல் நகராட்சி மூலம் செயல்படுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :** அனுமதியளிக்கலாம்.

2. எதிர்வரும் கோடை காலத்தினை கருத்தில் கொண்டு, பம்மல் செங்கழிநீர் மலை பகுதி கல்குவாரியில் உள்ள தண்ணீரை தினமும் 2.50MLD எடுத்து பம்மல் நகராட்சிக்கு 1.50MLD குடிநீரும், அனகாபுத்தூர் நகராட்சிக்கு 1.00MLD குடிநீரும் சுத்திகரிப்பு செய்து வழங்கிட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி அரசு மான்யமாக நிதியுதவி கோர கருத்துரு அனுப்பி வைக்கவும், மேற்படி பணியினை பம்மல் நகராட்சி மூலம் செயல்படுத்திட அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 4**

இந்நகராட்சி 18 வார்டு பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு மற்றும் டெங்கு தடுப்பு பணிகளுக்கான Dengue Breeding Checkers என்ற கொசு ஒழிப்பு பணியாளர்கள் 41 நபர்கள் பேன்ஸி ஏஜன்சி நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்யப்பட்டு வந்தது. இப்பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை குறைவாக உள்ளதால், பிப்ரவரி 2018 மாதத்தில் பணி மேற்கொண்டமைக்கு மேற்படி பேன்ஸி ஏஜன்சி நிறுவனத்தாருக்கு பில் தொகை வழங்கவும், மேலும் மார்ச் 2018 மாதத்திற்கு கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.4.50 இலட்சம் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பில் தொகை வழங்கியமைக்கு கூட்டம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.150 / 2016 / எச்1)

**பொருள் எண். 5**

அறிவிப்பு பகுதி IV பிரிவு 2 எண்.33, நாள் 25/01/2018ல் சட்ட எண். 6/2018 தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் ( இரண்டாவது திருத்தம் ) திருத்தப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 –பிரிவு 83 உட்பிரிவு 1 பகுதி (சி) ன்படி நகராட்சிகளிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர ஏனைய அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் என சட்டமாக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் நடைபெற்றுவரும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களும், பொறியாளர், நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் அடங்கியக் குழு ஆய்வு செய்து உரிய அளவீடுகள் அளிக்கவும், அதனை மேலாளர் உறுதி செய்யவும், பின்னர் வருவாய்

ஆய்வாளர் அந்தக் கட்டடத்திற்கான வரித்தொகையை நிர்ணயிக்கவும், அறிவிப்பு பகுதி IV பிரிவு 2 அறிவிப்பு எண்.33, நாள் 25/01/2018ல் சட்ட எண். 6/2018 தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் ( இரண்டாவது திருத்தம் ) திருத்தப்பட்டுள்ளவாறு அறிவிப்பினை நடைமுறைக்கு கொண்டு வர அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** அறிவிப்பு பகுதி IV பிரிவு 2 எண்.33, நாள் 25/01/2018ல் சட்ட எண். 6/2018 தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் ( இரண்டாவது திருத்தம் ) திருத்தப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920–பிரிவு 83 உட்பிரிவு 1 பகுதி (சி) ன்படி அனகாபுத்தூர் நகராட்சியிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர ஏனைய அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் என சட்டமாக்கப்படுள்ளதை அனகாபுத்தூர் நகராட்சியில் நடைமுறைப்படுத்தி வசூலிக்க அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.6**

20.03.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (லட்சத்தில்) | பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி சதவீதம் (மதிப்பீட்டிற்கு) திரு/திருமதி | |
|---|---|---|---|---|
| | | | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர் | விகிதம் |
| 1 | வார்டு எண்.1 முதல் 9 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள் , பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி | 9.90 | ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ்<br>ஆகாஷ் எலக்ட்ரிக்கல்ஸ் | குறைவு<br>அதிகம் |
| 2 | வார்டு எண்.10 முதல் 18 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள் , பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி | 9.90 | ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ்<br>ஆகாஷ் எலக்ட்ரிக்கல்ஸ் | குறைவு<br>அதிகம் |
| 3 | அலுவலக பயன்பாட்டுக்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள், இரசீது புத்தகங்கள், கணிணி பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் அச்சடித்து வழங்குதல். | 9.90 | வடக்கன்குளம் மல்டி பர்பஸ் இண்ட்கோ கோ ஆப் சொசைட்டி லிட்<br>சங்கு நகர் ஸ்டேஷனரிஸ் பிரிண்டிங் & ரிஜிஸ்டர்ஸ்<br>இண்டஸ் கோ ஆப் சொசைட்டி லிட் மடிபாக்கம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஸ்டேசனரி ரிஜிஸ்டர்&மேக்கிங் இன்டஸ்டிரியல் கோ–ஆப் சொசைட்டி லிமிடெட் மதுராந்தகம் மல்டிபார்பஸ் இண்டஸ்டிரியல் கோ–ஆப் சொசைட்டி லிமிடெட் | |
| 4 | பொது சுகாதார மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள குப்பை லாரி மற்றும் ஈப்பு வாகனம் இயக்க ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர் 5 நபர்கள் சப்ளை செய்தல் | 7.50 | வி.குணாளன் ஏ.சுசீலா | குறைவு அதிகம் |
| 5 | பொது சுகாதார பிரிவு பயன்பாட்டில் உள்ள மண்வாரி இயந்திரம் இயக்க ஒப்பந்த அடிப்படையில் 1 ஓட்டுநர் மற்றும் 1 துலக்குநர் சப்ளை செய்தல் | 3.60 | வி.குணாளன் ஏ.சுசீலா | குறைவு அதிகம் |
| 6 | குடிநீர் டேங்கர் லாரிக்கு ஓட்டுநர் 2 நபர் மற்றும் கிளினர்கள் 2 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் சப்பை செய்தல் | 7.00 | ஏ.சுசீலா வி.குணாளன் | குறைவு அதிகம் |
| 7 | பொது சுகாதார தளவாட பொருட்கள் விநியோகம் செய்தல் | 9.90 | கிருத்திகா அசோசியேட்ஸ் தி ஜார்ஜ் டவுன் மல்டிபர்பஸ் இன்டஸ்டிரியல் கோ–ஆப் சொசைட்டி லிமிடெட் | குறைவு அதிகம் |
| 8 | பொது சுகாதார பிரிவில் 30 எண்ணிக்கை முன்று சக்கர சைக்கிள் குப்பை வண்டி பழுது பார்த்து பராமரித்தல் பணி | 3.00 | பிர்லா போஸ் வி.குணாளன் | குறைவு அதிகம் |
| 9 | தற்காலிகமாக குடிநீர் சேமிப்பு தொட்டிகள் அமைத்தல் | 7.00 | லட்சுமி எண்டர்பிரைசஸ் மகாலட்சுமி எண்டர்பிரைசஸ் | 0.10% குறைவு 0.18% அதிகம் |
| 10 | நகராட்சி பகுதிகளில் உள்ள 240 எண்ணிக்கை மின் மோட்டார்களை பழுதுபார்த்து பராமரித்திட தேவையான மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் | 9.80 | ஏ.சுசீலா வி. குணாளன் | குறைவு அதிகம் |
| 11 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 13 எண்ணிக்கை குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை | 7.50 | ஓசோன் டெக்னாலஜிஸ் ஐ டெக் சுவிட் | 0.10% குறைவு 1.40% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பராமரிப்பு பணி செய்தல் | | வாட்டர் டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட் | |
| 12 | நகராட்சி பகுதிகளில் உள்ள 240 எண்ணிக்கையிலான மின் மோட்டார்கள் மற்றும் கைப்பம்பினை பழுதுபார்த்து பராமரித்திட தேவையான ஆட்களை சப்ளை செய்தல் | 9.50 | ஏ.சுசீலா<br>வி.குணாளன் | 0.05% குறைவு<br>1.20% அதிகம் |
| 13 | அரசு பள்ளிகளின் கழிவறைகள் பராமரிப்பு பணிகள், துப்புரவு பணிகள் செய்ய பணியாளர்களை சப்ளை செய்தல் மற்றும் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல் பணி | 9.90 | பேன்ஸி ஏஜென்சி<br>ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் | குறைவு<br>அதிகம் |
| 14 | பொது சுகாதார பிரிவிற்கு டாடா ஏஸ் வாகனம் சப்ளை செய்தல் பணி | 6.00 | தி வாலாஜாபேட்டை அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் கோ ஆப் சென்டர் லிட்<br>தி காட்பாடி அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் கோ ஆப் சென்டர் லிட் | குறைவு<br>அதிகம் |
| 15 | தட்டச்சு, ஜெராக்ஸ் பிரதிகள், போட்டோ மற்றும் வரைப்படம் தயாரித்தல் | 2.50 | விஜய் ஜெராக்ஸ்<br>வள்ளி ஜெராக்ஸ் | குறைவு<br>அதிகம் |
| 16 | நகராட்சி பகுதிகளில் உள்ள 140 எண்ணிக்கையிலான கைப்பம்பினை பழுதுபார்த்து பராமரித்திட தேவையான உதிரிபாகங்கள் சப்ளை செய்தல் | 5.00 | ஏ.சுசீலா<br>வி.குணாளன் | குறைவு<br>அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு :</u> 1.** வரிசை எண்.3யை தவிர்த்து மீதமுள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. வரிசை எண்.3ல் உள்ள பணிக்கு பணியில் உள்ள 343 இனங்களில் 210 இனங்களுக்கு மடிப்பாக்கம் எழுது பொருள் மற்றும் பதிவேடுகள் தயாரிப்பு தொழிற் கூட்டுறவு சங்கம் நிறுவனத்தார் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். 80 இனங்களுக்கு சங்கு நகர் ஸ்டேஷனரி பிரிண்டிங் & ரிஜிஸ்டர்ஸ் மேனுபேக்சரிங் இண்ட். கோ–ஆப் சொசைட்டி லிட் நிறுவனத்தார் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். 53 இனங்களுக்கு இரண்டு நிறுவனமும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளனர். அதிக இனங்களுக்கு குறைந்த

ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மடிப்பாக்கம் எழுது பொருள் மற்றும் பதிவேடுகள் தயாரிப்பு தொழிற் கூட்டுறவு சங்கம் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண். 7**

அனகாபுத்தூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.டி.என்.22 சி.டி 6242 வாகனத்தில் ஏற்பட்டிருந்த பழுதுகளை நீக்கம் செய்திடும் பொருட்டு, மேற்படி வாகனத்தை மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான இந்தியா கேரேஜ் நிறுவனம் மூலம் பழுது பார்த்தமைக்கு கட்டணமாக ரூ.43,704/—ஐ வரப்பெற்றுள்ளது. மேற்படி கட்டணத்தை செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு கூட்டம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 8**

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2016ன்படி மகளிர் பயன்படுத்திய நாப்கின்கள் மற்றும் குழந்தைகள் பயன்படுத்திய நாப்கின்கள் ஆகியவை உயர்த்த தட்ப வெப்பநிலையில் எரித்திட இன்சினிரெடர்கள் பயன்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் 2 பசுமை உரக்குடில்களில் 2 இன்சினிரெடர்கள் அமைக்க 12.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | ஆல்பா தெர்மோ சிஸ்டம்ஸ், 24ஜி1, ஹரிஹரா பிளாட்ஸ், நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை – 44. | மிக்ஸ் அண்ட் மேக்ஸ், 13,அய்யசாமி தெரு, நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை – 44. |
|---|---|---|---|
| | | (விலை ஒன்றுக்கு) | |
| 1. | 2 பசுமை உரக்குடில்களில் 2 இன்சினிரெடர்கள் அமைத்தல் பணி | 36,000.00 | 36,800.00 |

**அலுவலகக்குறிப்பு** 1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள அல்பா தெர்மோ சிஸ்டம்ஸ், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண். 9**

அனகாபுத்தூர் நகராட்சி 18 வார்டு பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு மற்றும் டெங்கு தடுப்பு பணிகளுக்கான Dengue Breeding Checkers என்ற கொசு ஒழிப்பு பணியாளர்கள் 41 நபர்கள்

பேன்ஸி ஏஜன்சி நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்யப்பட்டு வந்தது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–05 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில் கொசு ஒழிப்பு களப்பணியாளர்களை தொடர்ந்து பயன்படுத்தி கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேற்படி அறிவுறுத்தலின்படி கொசு ஒழிப்பு பணியினை ஏப்ரல் மற்றும் மே 2018 மாதங்களுக்கு கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.9.00 இலட்சம் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** கூட்டம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.150 / 2016 / எச்1)**

**<u>பொருள் எண்.10</u>**

அனகாபுத்தூர் எல்லைக்குட்பட்ட பகுதி வார்டு 13 முதல் 18 வரை குப்பைகள் அகற்றும் பணிக்கு வாடகை அடிப்படையில் தனியார் டிராக்டர் மூலம் 01.01.2018 முதல் 31.03.2018 வரை இந்நகரமன்ற தீர்மான எண்.255 நாள்.29.12.2017 நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டது. தற்போது கால நீட்டிப்பு 31.03.2018 அன்று முடிவடைவதாலும், இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தில் 9 எண்ணம் இலகுரக வாகனங்கள் வாங்க ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி பணிகள் முடிந்து வாகனங்கள் பயன்பாட்டிற்கு வரும் வரை, அதே ஒப்பந்ததாரர் மூலம் 01.04.2018 முதல் 31.05.2018 வரை கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.1.20 இலட்சம் செலவு செய்யவும் கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** கூட்டம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.121 / 2016 / எச்1)**

**<u>பொருள் எண். 11</u>**

அனகாபுத்தூர் எல்லைக்குட்பட்ட பகுதி வார்டு 1 முதல் 6 வரை குப்பைகள் அகற்றும் பணிக்கு வாடகை அடிப்படையில் தனியார் டிராக்டர் மூலம் 01.01.2018 முதல் 31.03.2018 வரை இந்நகரமன்ற தீர்மான எண்.253 நாள்.29.12.2017 நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டது. தற்போது கால நீட்டிப்பு 31.03.2018 அன்று முடிவடைவதாலும், இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தில் 9 எண்ணம் இலகுரக வாகனங்கள் வாங்க ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி பணிகள் முடிந்து வாகனங்கள் பயன்பாட்டிற்கு வரும் வரை, அதே ஒப்பந்ததாரர் மூலம் 01.04.2018 முதல் 31.05.2018 வரை கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.1.20 இலட்சம் செலவு செய்யவும் கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** கூட்டம் அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்.121 / 2016 / எச்1)**

**<u>பொருள் எண். 12</u>**

அனகாபுத்தூர் எல்லைக்குட்பட்ட பகுதி வார்டு 7 முதல் 12 வரை குப்பைகள் அகற்றும் பணிக்கு வாடகை அடிப்படையில் தனியார் டிராக்டர் மூலம் **01.01.2018** முதல் **31.03.2018** வரை இந்நகரமன்ற தீர்மான எண்.**254** நாள்.**29.12.2017** நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டது. தற்போது கால நீட்டிப்பு **31.03.2018** அன்று முடிவடைவதாலும், இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தில் **9** எண்ணம் இலகுரக வாகனங்கள் வாங்க ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி பணிகள் முடிந்து வாகனங்கள் பயன்பாட்டிற்கு வரும் வரை, அதே ஒப்பந்ததாரர் மூலம் **01.04.2018** முதல் **31.05.2018** வரை கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.**1.20** இலட்சம் செலவு செய்யவும் கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** கூட்டம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.121 / 2016 / எச்1)

**<u>பொருள் எண். 13</u>**

அனகாபுத்தூர் எல்லைக்குட்பட்ட பகுதி ஜே.என்.ரோடு மற்றும் காமராஜர் சாலை வரை குப்பைகள் அகற்றும் பணிக்கு வாடகை அடிப்படையில் தனியார் டிராக்டர் மூலம் **01.01.2018** முதல் **31.03.2018** வரை இந்நகரமன்ற தீர்மான எண்.**256** நாள்.**29.12.2017** நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டது. தற்போது கால நீட்டிப்பு **31.03.2018** அன்று முடிவடைவதாலும், இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தில் **9** எண்ணம் இலகுரக வாகனங்கள் வாங்க ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி பணிகள் முடிந்து வாகனங்கள் பயன்பாட்டிற்கு வரும் வரை, அதே ஒப்பந்ததாரர் மூலம் **01.04.2018** முதல் **31.05.2018** வரை கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.**1.20** இலட்சம் செலவு செய்யவும் கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** கூட்டம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.121 / 2016 / எச்1)

**<u>பொருள் எண். 14</u>**

**2017**-2018ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** கூட்டம் பதிவு செய்யலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி